

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில், சென்னை வளர்ச்சிக் கழகத்தலைவர், வழக்கறிஞர் வி.ஆர்.எஸ்.சம்பத் சந்தித்து பத்தாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பை முன்னிட்டு கலைஞர் தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் செய்த பொருளாதார வளர்ச்சி மற்றும் கலைஞர் படத்திறப்பு நிகழ்ச்சியைத் தலைமையேற்று தொடங்கிவைக்குமாறு அழைப்பு விடுத்து அதற்கான அழைப்பிதழை வழங்கினார்.

வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில்

## பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது!

### தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி தகவல்!

நெல்லை,டிச.25-

வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில் பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது. நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசியில் வெள்ளத்தில் புத்தகம் இழந்தவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.

அரையாண்டு விடுமுறையை அடுத்து தலைமை ஆசிரியர்கள் மூலம் மாணவர்களை தொடர்பு கொண்டு கணக்கெடுக்கப்படுகிறது. புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளதாக தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் லியோனி தகவல் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழிகுடி ஊராட்சியில் நேற்று (24.12.2023) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியை திமுக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அரிசி, பருப்பு உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார். மக்களைச் சந்தித்து அடிப்படைத் தேவைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளை அனைத்தும் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா உள்ளிட்டோர் உடனிருந்தார்.

சுகாதாரத் திட்டங்களில்,

## செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திட அரசிடம் திட்டங்கள் உள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச.25-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 15.12.2023 அன்று மக்களவையில், சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவும், அதனால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர், பேராசிரியர் சத்யபால் சிங் பாகேல் அவர்களி



டம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம், டெல்லி, மற்றும் ரிஷிகேஷ் முதுகலை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகர் போன்ற சிறப்புறு மருத்துவ மையங்களில் சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சாட், பார்ட், பெர்ட் போன்ற செயலிகளின் வழியாக நோயாளிகளுடன் கலந்துரையாடும் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், இதன் தீய விளைவுகளை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசின் திட்டக் குழுவினால் பொறுப்புணர்ச்சியுடன் செயற்கை நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு கொள்கைகள் ஆகிய இரண்டு கொள்கை விளக்க கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், செயற்கை நுண்ணறிவின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்க, டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் 2023 நாடாளுமன்றத்தினால் ஆகஸ்ட் 2023ல் சட்டமாக்கப்பட்டுள்ளது என்றும், இதனால் ஆயுஸ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் பயனாளிகளுக்கு தனிநபர் தரவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் சத்யபால் சிங் பாகேல், பதில் அளித்துள்ளார்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கோரம்பள்ளம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டனர். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கதன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

